உ
சிவமயம்







# அன்னபூரணி

அமரர்

## அன்னபூரணி கனகசபாபதி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த வெளியீடு

**13.01.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# அன்னபூரணி கனகசபாபதி

அவர்களின் பிரிவு குறித்த

# நினைவு மலர்

13.01.2016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் தலைமகளாய்
குடும்ப விருட்சத்தின் வேராகி
அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
சிறப்புடன் வாழ்ந்திருந்து
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில்கொண்ட
எங்கள் அன்புத் தெய்வமே
உங்களின் திடீர் பிரிவால் துயருறும் நாம்
உங்களின் பொன்னடித் தாமரைகளில்
இம்மலரைகாணிக்கையாய் சமர்ப்பிக்கின்றோம்

ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அன்னை மடியில்

21 . 11 . 1942



இறைவன் அடியில்

14 . 12 . 2015

அமரர்

# அன்னபூரணி கனகசபாபதி

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

மாண்புறு மன்மதவருட கார்த்திகைத் திங்களதில்
பூண்ட பூர்வபட்ச சதுர்த்திதனில் - நீடுபுகழ்
பண்புயர் கனகசபாபதி அன்னபூரணி நல்லாள்
நண்ணினாள் நாகம்மைநற்றாள் நயந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில் தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கு இட்டு
மின்னின் இடையாள் உடையாள் காண
விகிர்தன் ஆடுமே.

## திருப்பல்லாண்டு

நிட்டைஇலா வுடல்நீத்து என்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவன் அடியாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த்திக்கு என் அகம் நெகவூறும்
அமிர்தினுக்கு ஆலநிழல்
பட்டறுக்கு என்னைத் தன்பாற் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும்நான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுன் னடியின்கீழ்
இருக்க வென்றார்.

## திருப்புகழ்

எதிரிலாத பத்தி தனைமேவி
இனிய தாணினைப்பை யிருபோதும்
இதய வார்திக்கு ஞறவாகி
எனது ளேசிறக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனகமேரு வொத்த புயவீரா
மதுரவாணி யுற்ற கழலோனே
வழுதி கூனிமித்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புருவான அன்னை அன்னபூரணி கனகசபாபதி அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தென எழிலுடன் திகழ்வது ஈழமணித் திருநாடு. இதன் வடபால் யாழ் குடாநாட்டின் தென்திசையில் சப்த தீவுகளுக்கு மத்தியில் விளங்குவதும், அருட்பொலிவும் ஆன்மீகச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் பெற்று விளங்குவதும் நயினாதீவாகும். "மணிபல்லவம்" என்று போற்றப்படும் இலக்கியச் சிறப்பும் இதற்குண்டு. இயற்கை எழிலுடன் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றி வாழும் மக்கள் வாழும் புண்ணிய பூமி இதுவாகும். சாந்தியும் சமாதானமும் அமைதியும் நிறைந்த இவ் அழகிய தீவிலே அம்பிகை எழுந்தருளி அகில உலகிலுமுள்ள ஆன்மாக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடத்தினை அலங்கரித்துக் கொண்டு அருளாட்சி செய்கின்றாள்.

இத்தகைய சிறப்புக்கள் அனைத்தையும் பெற்று சர்வமத சந்நிதியாக விளங்குகின்ற நயினையம்பதியில் இறைபக்தியும் அன்பும் பண்பும் கொண்ட உயர்வேளார் குடும்பத்தைச் சேர்ந்த காலம் சென்ற கார்த்திகேசு செல்லையா, செல்லையா வள்ளியம்மை ஆகியோரின் மூத்த மகளாக அமரர் அன்னபூரணி அவர்கள் 21.11.1942இல் பிறந்தார்கள். அக்காலத்தில் இவரது தந்தையார் கொழும்பில் வியாபார நிலையம் ஒன்றினை நடத்தி வந்தமையால் குடும்பமும் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தது. இவரின் அன்புச் சகோதரராக திரு செ.சந்திரசேகரம் (வர்த்தகர்) அவர்களும் அன்புச் சகோதரிகளாக காலம் சென்ற இராசபூரணி மற்றும் செல்வபூரணி (கனடா) ஆகியோரும் பிறந்தனர். குடும்பம் மகிழ்வுடன் வாழ்ந்து வந்த வேளையில் இவரது பதினைந்தாவது வயதில் தந்தையாரை கொழும்பில் நடந்த விபத்தொன்றில் இழக்க நேர்ந்தது. இதனால் குடும்பமும் உறவுகளும் சொல்லொணாத் சோகத்தில் ஆழ்ந்தனர். அமரர் அன்னபூரணியும் சகோதரர் சகோதரிகளும் அன்னையின் அரவணைப்பில் வளர்ந்து வரலாயினர். தாயாரும் அன்பு, அறம், பண்பு ஆகிய அருங் குணங்களை பிள்ளைகளிடத்து கருத்தோடு பதித்து வளர்த்தெடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவயதிலிருந்தே அன்னபூரணி அவர்கள் அழகும், நல்லறிவும் மிக்கவராக விளங்கினார். தன் கல்வியை நயினாதீவு மகா வித்தியாலயத்தில் கற்று தன் திறமையினால் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

இவர் திருமண வயதினை அடைந்த வேளை சிறிய தந்தையர்கள் ஒன்று சேர்ந்து நயினை இளையதம்பி மனோன்மணி தம்பதிகளின் ஏக புதல்வனும் ஆசிரியருமான திரு கனகசபாபதி அவர்களை 1969இல் திருமணம் செய்து வைத்தனர். தம்பதிகள் அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது என்பதை சிரமேற் கொண்டு தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தாம் என்ற ஐவகை இடத்தும் அறநெறி தவறாது வாழ்ந்து வரலாயினர்.

"மாங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன் மக்கட்பேறு" - குறள்

என்ற குறள் வாக்குக்கமைய சுகந்தி, பிரதீபன் என இருகண்மணி யொத்த பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர்.

திரு.இ.கனகசபாபதி ஆசிரியர் அவர்கள் ஐந்தாம் தரப் புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு கற்பிப்பதில் பாண்டித்தியம் பெற்றவர் பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் மேற்படி பரீட்சையில் சித்திபெறவும், பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறவும் வழிகாட்டிய பெருந்தகை, ஆசிரியர் அவர்கள் மலைநாட்டில் பதுளை மாவட்டப் பாடசாலைகளில் கற்பித்த காலத்தில் அன்னையாரும், குழந்தைகளும் அவருடன் சென்று அங்கேயே வாழ்ந்தனர். அவர் யாழ் மாவட்டத்துக்கு மாற்றலான பின்னர் சொந்த ஊருக்கு வந்து ஓர் புது மனையினையும் அமைத்து சிறப்பாக வாழ்ந்து வந்தனர்.

சகோதரர்கள் திருமண வயதினை அடைந்த பொழுது தம்பியாருக்கு மாமியின் மகளான செல்வி விஸ்வலிங்கம் கமலாசினிதேவி அவர்களையும், மூத்த சகோதரிக்கு உறவினரான திரு.நாகலிங்கம் சாம்பசிவம் (வர்த்தகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களையும் இளைய சகோதரிக்கு மாமியின் மகனான திரு சின்னையா அரியரெத்தினம் (கனடா) அவர்களையும் திருமணம் செய்து வைத்து சகோதரர்களின் சிறப்புக்கண்டு இன்புற்றிருந்தார். கணவரின் ஒரே சகோதரி யான திரு.திருமதி.சரவணபவன் (அதிபர்) மங்கயற்கரசி குடும்பத்தினருடனும் மிக்க அன்பு கொண்டவராக வாழ்ந்தார்கள்.

இவர்கள் தங்களின் பிள்ளைகளின் கல்வி உயர்வுக்காக யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் குடியேறினர். திரு.கனகசபாபதி ஆசிரியரும் நயினாதீவு கணேச கனிஷ்ட வித்தியாலயத்திலிருந்து மாற்றலாகி யாழ் நகரப் பாடசாலைகளில் கடமையாற்றத் தொடங்கினார். பிள்ளைகள் இருவரையும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய சிறந்த பாடசாலைகளில் கல்வி கற்கச் செய்தனர். இரவரும் க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். பல்கலைக்கழக கல்வியை முடித்து பட்டதாரியான மகள் சுகந்தி (BA, PGDE) பயிற்சி பெற்ற விஞ்ஞான ஆசிரியையாகக் (யாழ்/ பெரியபுலம் மகா வித்தியாலயத்தில்) கடமையாற்றி வருகிறார். மொரட்டுவ பல்கலைக்கழகப் பொறியியலாளரான மகன் பிரதீபன் பொறியியலாளராகப் (Melbourne Textile Washing Plant) பணியாற்றி வருகிறார்.

இவற்றால்

"ஈன்ற பொழுதிற் பெரிது உவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்பதற்கிணங்க அன்னை அவள் மகிழ்வு கொண்டார்கள்.

பிள்ளைகள் திருமண வயதை அடைந்ததும் மகள் சுகந்தி ஆசிரியைக்கு நயினை அதிபர் திரு காமாட்சி சுந்தரம் திருமதி கனகம்மா காமாட்சிசுந்தரம் அவர்களின் மகனான உயர் பண்பாளர் Dr.கா.நடேசராசன் அவர்களை திருமணம் செய்து வைத்து தாமும் அவர்களுடனே மகிழ்வாக வாழ்ந்து வந்தனர். மகளின் புதல்விகளான ஜானுகா, திவ்யா ஆகிய அன்புப் பேர்த்திகளுடன் தமது நேரத்தை மகிழ்வாக களித்து வந்தனர். பேரப்பிள்ளை களும் இவர்களை அன்பாகப் பராமரித்து வந்தனர் என்பதும் மகிழ்ச்சிக்குரியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனாருக்கு உசனைச் சேர்ந்த திரு செல்வரெத்தினம் திருமதி தவமணி செல்வரெத்தினம் அவர்களின் புதல்வி நற்குணவாட்டி செல்வி துஷிதா (கணக்காளர்) அவர்களுக்கு திருமணம் செய்து மகிழ்வு கொண்டனர். மகன் குடும்பம் தொழில் நிமித்தம் கொழும்பில் வாழ்ந்து வந்தனராயினும் அடிக்கடி தம் பிள்ளைகளான ஜீவகாஷ், சஷ்மிதாவையும் அழைத்துக் கொண்டு குடும்பத்துடன் சென்று பெற்றோரையும், சகோதரி குடும்பத்தினரையும் பார்ப்பதுடன் பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்து வந்தார்கள். அன்புப் பேரக்குழந்தைகள் நால்வரும் சேர்ந்து இருந்து விளையாடுவதை பார்த்து அமரர் அவர்கள் அளவிலா மகிழ்வெய்துவார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"
- குறள்

அமரரை மிகவும் துக்கத்தில் ஆழ்த்திய நிகழ்வு சகோதரி இராசபூரணி சாம்சிவத்தின் இளவயது மரணமாகும். இதன்பின் தங்கையின் மூன்று பிள்ளைகளையும் தன் பிள்ளைகளாகவே வளர்த்து நல்வழி காட்டினார்கள். இவரது தாயாரும் தாம் மறையும் மட்டும் இப் பேரப்பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக இருந்தார்கள் என்பதும் குறிப்பிட வேண்டியதாகும். ஒன்று விட்ட சகோதரர்கள், சகோதரிகளையும் தன் உடன் பிறப்புக்களாகவே எண்ணி அன்பு காட்டிய பேருள்ளம் கொண்டவர். அவர்களின் பிள்ளைகளின் உயர்ச்சியிலும் அக்கறை கொண்டு ஆலோசனை கூறி வழிநடத்தி வந்தார்கள்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புளார்
என்புமுரியர் பிறர்க்கு" - குறள்

தயாள சிந்தை கொண்ட திரு கனகசபாபதி ஆசிரியரும் துணைவியாரும் நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபைக்கு முன்பாக இருந்த தமது காணியை அன்பளிப்பாக மேற்படி சபைக்கு வழங்கினார்கள். அவ்விடத்தில் அன்னையாரின் பெயரில் அமைந்த "அன்னபூரணி இறை பணியகம்" அமையப்பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதீத இறைநம்பிக்கை கொண்ட அமரர் அவர்கள் ஆலய தரிசனங்களை இடையறாது செய்துவந்தார்கள். அமரர் அண்மையில் நயினாதீவுக்கு சென்றிருந்த வேளை ஓர் முச்சக்கர வண்டியில் மகள் கவிதாவுடன் ஊரில் உள்ள அனைத்து ஆலயங்களையும் தரிசித்து வந்துள்ளார் என அறிகின்றோம்.

"எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்"

என யோகர் சுவாமிகளுக்கு அவரது குருநாதர் தேரடிச் செல்லப்பா சுவாமிகள் கூறிய மகா வாக்கியத்தின் உண்மையை உணர்வோமாக!

பிறர் மனம் நோகாது இன்சொல் பேசிய அன்பே உருவான அன்னை அவர்கள் தன் நோய் எண்ணாது தம் கணவரின் நோய் கண்டு வேதனையுற்று அவரை அன்போடு கவனித்து வந்துள்ளார்கள் என்பதை அறியும் போது அவர் கணவர் மேல் வைத்திருந்த அன்பின் உச்சத்தை எம்மால் உணர முடிகிறது. பாசமிகு பிள்ளைகளையும், அன்பான பேரக்குழந்தைகளையும், அன்பு மருமக்களையும் உற்றார், உறவினர்களையும், நண்பர்களையும் அன்போடு ஆதரித்து உபசரித்து அவர்களின் நன்மை தீமைகளில் பங்கு கொண்டு இவ்வுலக வாழ்வுக்கு இலட்சணமாக ஓர் எடுத்துக் காட்டாக வாழ்ந்த அமரர் அன்னபூரணி கனகசபாபதி அவர்கள் தம் நோய் காரணமாக 2015ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இருபத்தெட்டாம் திகதி (14.12.2015) தாம் செய்தவப்புண்ணியப் பயனாக இவ்வுலக வாழ்வு நீக்கி எல்லாம் வல்ல நயினை நாகபூசணித்தாயின் மலரடியில் இரண்டறக் கலந்து பேரானந்தப் பெரு வாழ்வு பெற்றார்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."
"சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வம் தான்
பெற்றத்தால் பெற்ற பயன்"
இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

நினைவுகளுடன்
சோ.தில்லைநாதன் (தம்பி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்ச புராணப் பாடல்கள்

### ஞாயிற்றுக்கிழமை

**1. தேவாரம்:**

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

**பண் – சீகாம்றம்** **2ம் திருமுறை**

திருச்சிற்றம்பலம்

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

**2. திருவாசகம்** **8ம் திருமுறை**

மணிவாசகப் பெருமான்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**3. திருவிசைப்பா** **9ம் திருமுறை**

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. திருப்பல்லாண்டு**

**பண்-பஞ்சமம்** **9ம் திருமுறை**

**சேந்தனார்**

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடி குடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

**5. பெரியபுராணம்**

**சேக்கிழார் பெருமான்** **12ம் திருமுறை**

ஆதியாய் நடுவு மாகி அளவிலா வளவு மாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப்பொதுநடம் போற்றி போற்றி

## திங்கட்கிழமை

**1. தேவாரம்**

**திருஞானசம்பந்தரமூர்த்தி நாயனார்**

**பண்-கொல்லி** **3ம் திருமுறை**

திருச்சிற்றம்பலம்

மண்ணில்நம் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின்நல் ல.்.துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. திருவாசகம்**

**மணிவாசகப் பெருமான்    8ம் திருமுறை**

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம
 வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ்
 சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்
 கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
 வெறுத்திடவே

**3. திருவிசைப்பா**

**பூந்துருத்தி நம்பி காடநம்பி**

**பண் – சாளரபாணி    9ம் திருமுறை**

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.

**4. திருப்பல்லாண்டு**

**பண்–பஞ்சமம்    9ம் திருமுறை**

**சேந்தனார்**

சொல்லண்ட சுருதிப்பொருள் சோதித்த
 தூமனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
 தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
 மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
 தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. பெரியபுராணம்**

**சேக்கிழார் பெருமான்** **12ம் திருமுறை**

தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

திருச்சிற்றம்பலம்

## செவ்வாய்க்கிழமை

**1. தேவாரம்**

**திருநாவுக்கரசு நாயனார்**

**திருவிருத்தம்** **4ம் திருமுறை**

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே.

**2. திருவாசகம்**

**மணிவாசகப்பெருமான்** **8ம் திருமுறை**

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞானமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. திருவிசைப்பா**

**பூந்துருத்தி நம்பி காடநம்பி 9ம் திருமுறை**

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாற வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.

**4. திருப்பல்லாண்டு**

**பண்- பஞ்சமம் 9ம் திருமுறை**

**சேந்தனார்**

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்
றேன்பெற்ற தார்பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

**5. பெரியபுராணம்**

**சேக்கிழார் பெருமான் 12ம் திருமுறை**

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்த்தார்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதன்கிழமை

1. தேவாரம்

திருநாவுக்கரசு நாயனார்

திருத்தாண்டகம் 6ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருநாமம் அச்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

2. திருவாசகம் 8ம் திருமுறை

மாணிக்கவாசகப் பெருமான்

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. திருவிசைப்பா

பண் – பஞ்சமம் 9ம் திருமுறை

சேந்தனார்

ஏகநா யகனை இமயவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றென்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

4. திருப்பல்லாண்டு:

பண்–பஞ்சமம் 9ம் திருமுறை

சேந்தனார்

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம் 12ம் திருமுறை

சேக்கிழார்பெருமான்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழக்கிழமை

**1. தேவாரம்**

**சுந்தரமூர்த்தி நாயனார்**

**பண்-கொல்லி** **7ம் திருமுறை**

திருச்சிற்றம்பலம்

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள்வதற்(கு)
யாது மையுற வில்லையே.

**2. திருவாசகம்** **8ம் திருமுறை**

**மணிவாசகப் பெருமான்**

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

**3. திருவிசைப்பா**

**பண்-பஞ்சமம்** **9ம் திருமுறை**

**கருவூர்த்தேவர்**

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங் கொருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல களிக்கும்நின் பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

**4. திருப்பல்லாண்டு**

**சேந்தனார்**

**பண் - பஞ்சமம்** **9ம் திருமுறை**

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

**5. பெரியபுராணம்**

**சேக்கிழார் பெருமான்** **12ம் திருமுறை**

ஞானத்தின் திருவுருவை நான்மறையின்
தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர்
மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்
சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண் களிப்பக்
கண்டார்கள்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளிக்கிழமை

**1. தேவாரம்**

**பண் - தக்கேசி** **7ம் திருமுறை**

**சுந்தரமூர்த்திநாயனார்**

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி யொண்ணா
எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே.

**2. திருவாசகம்**

**மணிவாசகப் பெருமான்** **8ம் திருமுறை**

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே

**3. திருவிசைப்பா**

**பண் - இந்தளம்** **9ம் திருமுறை**

**திருவாலியமுதனார்**

அன்ன நடையார் அமுத
மொழியார் அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும்
கலந்த சிற்றம் பலந்தன்னுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னும் மணியும் நிரந்த
தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள்
காண விகிர்தன் ஆடுமே.

**4. திருப்பல்லாண்டு**

**பண்-பஞ்சமம்** **9ம் திருமுறை**

**சேந்தனார்**

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வும்சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடும் கூடிஎம்
மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

**5. பெரியபுராணம்**

**சேக்கிழார்பெருமான்** **12ம் திருமுறை**

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னால் அவர் நல்விழாப் பொலிவுகண் டார் தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகென உரைப்பார்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனிக்கிழமை

### 1. தேவாரம்

திருநாவுக்கரசுநாயனார்

**திருவிருத்தம்** **4ம் திருமுறை**

திருச்சிற்றம்பலம்

கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென்னுள்ளமும் நானும் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற் றிலாமையும் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

### 2. திருவாசகம்

**மணிவாசகப்பெருமான்** **8ம் திருமுறை**

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

### 3. திருவிசைப்பா

**பண்-பஞ்சமம்** **9ம் திருமுறை**

கண்டராதித்தர்

முத்தீயாளர் நான்மறையர் மூவா யிரவர் நின்னோடு
ஒத்தே வாழும் தன்மையாளர் ஓதிய நான் மறையைத்
தெத்தேயென்றுவண்டு பாடும் தென்தில்லை அம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. திருப்பல்லாண்டு**

**பண் - பஞ்சமம்** **9ம் திருமுறை**

**சேந்தனார்**

நிட்டை யிலாவுடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீராட்டுந்
திறங்களுமேசிந்தித்(து)
அட்டமூர்த்திக்கென் அகம்நெகஊறும்
அமிர்தினுக் காலநிழல்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

**5. பெரியபுராணம்**

**சேக்கிழார்பெருமான்** **12ம் திருமுறை**

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே
லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான்
மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின்கீ
ழிருக்க வென்றார்
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய
# கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறுநல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் ரவர்க்கு மிகவே. 1

என்பொடுகொம்பொடாமை யிவைமார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதிமத்தமாலை புனல் சூடி வந்தென்
உள்மே புகுந்த அதனால்
ஒன்பதொடொன்றோடேழு பதினெட்டோடாறும்
உடனாய நாள்களவைதாம்
அன்பொடுநல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்குமிகவே. 2

உருவளர்பவளமேனி ஒளிநீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர்கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வமான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்குமிகவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து
மறையோ துமெங்கள் பரமன்
நதியொடுகொன்றைமாலை முடிமேலணிந்தென்
உளமே புகந்த அதனால்
கொதியுறுகாலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களானபலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 4

நஞ்சணிகண்டனெந்தை மடவாள் தனோடும்
விடையேறுநங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்னு
மிகையான பூதமவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்குமிகவே. 5

வாள்வரியதள தாடை வரிகோவணத்தர்
மடவாள்தனோடு முடனாய்
நாண்மலர்வன்னி கொன்றை நதிசூடிவந்தென்
உளமேபுகுந்த அதனால்
கோளரியுழுவையோடு கொலையானைகேழல்
கொடுநாக மோடுகரடி
ஆளரிநல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 6

செப்பிளமுலை நன்மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிளமதியுமப்பு முடி மேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையானபித்து
வினையானவந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்படவிழி செய்தன்று விடைமேலிருந்து
மடவாள்தனோடு முடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்றனோடும்
இடரானவந்துநலியா
ஆழ்கடல்நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரிபாகன்
பசுவேறுமெங்கள் பரமன்
சலமகளோடெருக்கு முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
மலர்மிசையோனுமாலு மறையோடு தேவர்
வருகாலமான பலவும்
அலை கடல்மேருநல்ல அவை நல்லநல்ல
அடியரவர்க்கு மிகவே. 9

கொத்தலர்குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும்மதியுநாக முடி மேலணிந்தென்
உளமேபுகுந்த வதனால்
புத்தரொடமணைவாதி லழிவிக்குமண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகுநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்குநிகழ
நான்முகனாதி யாய பிரமாபுரத்து
மறைஞானஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாதவண்ண முரைசெய்
ஆனசொல்மாலை யோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் பதிகம்

**'சமயத்திலுள்ளது நீறு'**

1. மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயன் திருநீறே

**'வெந்துயர் தீர்ப்பது நீறு'**

2. வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே

**'சத்தியமாவது நீறு'**

3. முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே

**'பெருமை கொடுப்பது நீறு'**

4. காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயன் திருநீறே

**'பேச இனியது நீறு'**

5. பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந் தவத்தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயன் திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'புண்ணியம் பூசும் வெண்ணீறு'**

6. அருத்த மதாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே

**'பயிலப்படுவது நீறு'**

7. எயிலது வட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான் திருநீறே

**'இராவணன் மேலது நீறு'**

8. இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே

**'இன்பந்தருவது நீறு'**

9. மாலொடு அயனறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமு துண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே

**'கருத இனியது நீறு'**

10. குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவாயன் திருநீறே

**'ஆலவாயன் திருநீறு'**

11. ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின் தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச் செய்த

# திருகோணமலைத் தேவாரத் திருப்பதிகம்

பண் - புறநீர்மை

*திருச்சிற்றம்பலம்*

நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே. 1

கடிதென வந்த கரிதனை உரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதல் அவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரை கடல் சூழ்ந்து
கொள்முன் நித்திலம் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையர்ந் தாரே. 2

பனித்திளந் திங்கள் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபேர் உருவ விழித்தழல் நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் கரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியர்
விழத்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடற் றரளம்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கடையிடைச் சேர்க்கும்
கோணமா மலையமர்ந் தாரே. 4

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பலர் வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 5

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்உயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவர்க் கருளும்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வெங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடி முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 6

(எழாவது பாட்டு மறைந்து விட்டது)
எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புழக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 8

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மார்க்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணக்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 9

நின்றுணுஞ் சமணுஞ் இருந்துணும் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவம் மல்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு துறைபல மோதிக்
குன்றுமொண் காலன் வாசம்வந் துலவும்
கோணமா மலையமர்ந் தாரே. 10

குற்றமில்லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெத் தமிழார் மாலையீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய நமச்சிவாயத் திருப்பதிகம்

*திருச்சிற்றம்பலம்*

பண்-காந்தார பஞ்சமம் (4-ம் திருமுறை)

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவு வோமல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலும் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னாடிற்று நமச்சி வாயவே.

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்(து)
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம்

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத்தானே

சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிற கீழுங்
சுடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்றிருக் கேதீச்சரத்தானே.

அங்கம்மொழி யன்னாரவ அமரர் தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேற்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத்தானே

கரியகறைக் கண்டனல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கம் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக்கேதீச்சரத் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி
வையமலி கின்றகடன் மாதோட்ட நன்னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்பசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே.

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான் திருக்கேதீச்சரத் தானே.

அட்டன்னழ காகவரை கன்மேலர வார்த்து
மட்டுண்டுவண்டாலும் பொழில் மாதோட்டன் னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்றிருக் கேதீச்சாரத் தானே.

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ் செயுங்கேதீச்சரத்தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டனுரை செய்த
குறையாத் தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருண் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுவோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆநந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருகபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாய்எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுக் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப்பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச் செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருந் தோதியை
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையிற் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுங்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எனக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ இலோ மேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருண் முடிவே
பேதை யொருபாற் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குள்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமுங் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பச்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தெனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாயந் தாடேலோ ரெம்பாவாய். 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடிவின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை எனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அழிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணியம்மை தோத்திரம்

(நயினை க.இராமச்சந்திரா)

எனக்கொன்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என்இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்த மென்ற
உண்மையான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகிறேன்
தன்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்தத்
தரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

பெற்றதாயன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலாலன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய வனைத்தும்
முதவலான்னை யெக்கலையும்
சொற்றதாலன்னை யுலகொடுவானுந்
தொழுதலான்னை யென்றென்றும்
பற்றதாங்கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியாள்

வரகவி நயினை க.நாகமணிப்புலவர்

## நவநாயகர்களின் நல்லருள் பெற ஒரு நற்றமிழ் மந்திரம்

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இன்பமோ, துன்பமோ எது நேர்வதாயினும் அதற்கு நவக்கிரகங்களுக்கு ஒரு முக்கிய மான பங்கு இருக்கிறது என்பதை நமக்குச் சோதிட நூல்கள் நன்கு உணர்த்துகின்றன.

திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் போன்ற அருளாளர் களும் கூட இன்னல் நேரலாம் என்றவேளை "கோளறு பதிகம்" பாடி நவநாயர்களின் நல்லருளைப் பெற்றதை நாம் அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னல் சூழ்ந்த இந்நாட்களில் இந்நவநாயகர்களை எளிய தமிழில் துதிசெய்து, எப்போதும் நலமடைய இதோ ஓர் இனிய தமிழ்த் தோத்திரம். இதைத் தினந்தோறும் பாராயணஞ் செய்து நவக்கிர கமூர்த்திகளைப் போற்றித் துதித்து நல்லருள் பெறுவோமாக!

**சூரிய பகவான்**

சீரருள் மிகச்சு ரத்து செகத்துயிர் அனைத்துங் காக்கப்
பேரருள் பிதாவு மாகிய பெருந்துன்ப இருளையோட்டிக்
காரருள் சுகத்தை நல்கக் கதிர்களா யிரம்ப ரப்பும்
பாரருள் பரிதிப் புத்தேள் பதமலர் சென்னி வைப்பாம்.

**சந்திர பகவான்**

செழித்திடச் செல்வம் நல்கிச் செகத்தள உயிர்கட்கெல்லாம்
வழுத்திடும் பிதாவுமாகி வல்லிருள் தன்னை யோட்டித்
தழைத்திட அமுதமாகத் தக்கதோர் கதிர்ப ரப்பிப்
பொழிந்திடுஞ் சோமநாதன் பொற்பதம் தலைக் கொள்வோமே

**அங்காரக (செவ்வாய்) பகவான்**

வெற்றியும் வீரம் ஆண்மை விதரணம் பராக்கிர மங்கள்
சுற்றமாம் தீரம் நல்கிச் சோதரன் தானும் ஆகிப்
பற்றிய பூமி யின்பம் பரன்பிரு தான்னியம் ஓங்கி
எற்றிசைப் புகழும் சேயின் இருபதம் தலைக்கொள்வோமே

**புத(புதன்) பகவான்**

இணக்கமாம் மகிழ்ச்சி இன்பம் இயலுறும் புத்தி, யுக்தி
வணக்கமாம் கல்வி மேன்மை வருந்தனம் மகிழ்ச்சி புண்யம்
துணக்கமாம் பந்துவாகித் துலங்கிடச் சுகங்கள் நல்கும்
கணக்கனாம் எந்தை பாதம் கழலடி சென்னி வைப்பாம்

**வியாழ பகவான்**

பெருநிறை செல்வம் மேன்மை பெற்றிடுஞ் சுகங்கல்யாணம்
வருநிறை மரபு நீடி வாய்க்குஞ்சந் ததிதழைக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருநிறை ஆடை ரத்னந் தான்பெற அருளும் தேவ
குருநிறை வியாழன் பொற்றாள் குரைகழல் தலைக்கொள் வோமே

**சுக்கிர (வெள்ளி) பகவான்**

திரைகடல் சூழும் பூமி சேர்ந்திடும் உயிர்கட்கெல்லாம்
நிறைதரும் யோக போகம் நீடிய மனைவி இன்பம்
தரைபுகழ் வாக னங்கள் தக்கதோர் சுகத்தை நல்கும்
மறைமொழி புகரின் பொற்றாள் மலரடிதலைக்கொள்வோமே.

**சனி பகவான்**

கோரிய உலகத் தின்கண் குலவிய உயிர்கட்கெல்லாம்
மீறிடச் சுகம ளித்து மெய்த்தளர் பிணியை நீக்கிச்
சீறிய துன்பந் தீர்த்து சிறக்கத்தீர்க் காயுள் நல்கும்
காரியின் கமல பாத கடிமலர் தலைக்கொள்வோமே

**இராகு பகவான்**

பணியென உருவம் ஆகிப் பட்சமாய் அமுதம் உண்டு
தணியென உயிர்கட் கெல்லாம் தகும்படி யோக போகம்
துணிவுடன் அளித்து நாளும் துலங்கிட இன்பம் நல்கும்
மணமுறும் இராகு பொற்றாள் மலரடி சென்னி வைப்பாம்.

**கேது பகவான்**

மாதுமை பாகன் சொற்ற வரத்தினால் அமுதபானக்
கேதுவும் உடைய னாகி எவ்வுயிர் களுந்த ழைக்கக்
கோதிலா ஞானம் மோட்சம் குருபக்தி அருளும் நல்கும்
கேதுவாம் பகவான் பாதம் கிளர்முடி மிசைகொள் வோமே.

**சனிபகவான் துதி**

சஞ்சலம் தீர்க்கும் சனிபக வானே!
அஞ்சலித் துன்னை அனுதினம் பணிவேன்
தஞ்சம் அளித்துத் தயாபரித் தருள்வாய்
விஞ்சும் தீவினை விரட்டிப் போக்குவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தன் பிணிகள் இல்லா தொழிப்பாய்
சிந்தனை உந்தன் திருவடிக் கிட்டேன்
காக்க காக்க காக்கை உன் ஊர்தியில்
போக்க வினைகள் புறப்பட்டிடுவாய்
ஒளியுடன் உன்னைச் சூழ்ந்துள வட்டம்
வெளியே விலக்கி விரைவாய் வருக!
வருக! வருக! சனிபகவானே!
உருகி உன்னை உவப்புடன் அழைத்தேன்
பெருகிடும் அன்பால் பிரியமாய் வணங்கினேன்
தருக எமக்குச் சாந்தியும் தகவும்
பகவான் என உன்னைப் பணியும் பாக்கியம்
மிகவாய்ப் பெற்றேன் மேன்மை தருவாய்
போற்றி! போற்றி சனிபக வானே!
ஆற்றி என்னைத் தேற்றி வைப்பாய்!
காற்றும் கனலும் நீரும் புவியும்
ஏற்றும் வானும் இடைஞ்சல் இன்றி
நேற்றும் இன்றும் நாளையும் என்றும்
ஆற்றிய ஆற்றும் ஆற்றிடவுள்ள
மாற்றமும் மறைப்பும் மன்னித்திடுவாய்
சீற்றம் இன்றிச் சிறூர்தன செவ்வாய்
வாழ்க! வாழ்க! உன்புகழ் வாழ்க!
சூழ்க நன்மைகள் தொலைக வன்செயல்
சனியன் இனியன் ஏற்றதோர் தகமையே
இனிய தாக என்றும் துலங்குக
பனித்துளி ஒளியது பட்டழிந்ததுபோல்
தணித்திடு எனதுயர் உன்னொளியாலே
சனியன் பிடித்தது என்றுனைச் சாடா
இனிய னாகி ஏற்றமாய் வாழ்க!

வியாழ குருபகவான் துதி
குருவாள் என்றும் குவலயத் தியங்கி
உருவாய் உயிர்களை இயக்கும் பொருளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவாய் எமக்கு தகவும் தயவும்
வருவாய் வாழ்வை வளமாய் ஆக்கிட
அயற்சி இன்றி ஆற்றல் பெற்று
முயற்சி யோடு முன்னே சென்று
உயற்சி பெறநீ உன்னருள் தருவாய்!
பெயற்சி பெறினும் பீடம் மாறினும்
தளர்ச்சி இன்றித் தாங்கி எம்மை
வளர்ச்சி பெற்றிட வைப்பாய் குருவே!

## எங்குற்றாய் அம்மம்மா ....

அம்மம்மா என்றழைக்க யாருமில்லை
எங்கள் வீட்டில் - உன் முகம்
காண ஆசையாய் இருக்கிறது
ஓடி வருவாயோ ஒரு தரம்
வாடி நிற்கின்றோம் ஏசி
ஒருதரும் எம் பசி தீர்க்க ....
சின்ன வேலை உனக்கு நாம்
செய்தால் பெரிய கூலி
கொடுத்தெம்மைக் குளிரவைப்பாய்
பாதி வழியில் எமை விட்டு எங்குற்றாய்
அம்மம்மா .....

யானு. திவ்வி

## அப்பம்மா எங்கே?

ஆசை அப்பம்மாவே ...
உங்கள் வாசல் தேடி வந்தோம்
நேசமுடன் அரவணைத்து
சுகம் விசாரிக்கும் நீங்கள்
தேசம் விட்டுப் போனதெங்கே
அப்பாவிடம் கேட்டால்
அப்பு சாமியிடம் என்கிறாரே
எப்போது வருவீர்கள் அப்பம்மா ...

ஜீ, ஸஸ்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக தோஷ பாடல்கள்

### ஞாயிறு

சீலமாய்வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

### திங்கள்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சந்திரா போற்றி

### செவ்வாய்

சிறப்புறு மணியே செய்வாய் தேவே
குறைவில்லாதருள்வாள் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
ஆங்காரஹனே அவதிகள் நீக்கு

### புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதுபகவானே பொன்னடி போற்றி
பதம் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருளும் உத்தமா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழன்

குணமுள்ள வியாழ குருபகவானே
மணமுள்ள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ பரகுருநேசா
கிரகதோஷ மின்றிக் கடாட்சித் தருள்வாய்

## வெள்ளி

சுக்கிர மூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே

## சனி

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வர தேவா!
இச்சகம் வாழ இன்னருள் தாதா

## ராகு

அரவேனும் ராகு ஐயனே போற்றி
சுரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகு கனியே ரெம்மியா போற்றி

## கேது

கேது தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேது தேவே கேண்மையாய் ரகஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டணத்துப் பிள்ளையார் அருளிச் செய்த உடற்கூற்று வண்ணம்

தன தன தான தன தன தான
தந்த தனந்தன தந்த தனந்த
தனன தனந்த தனன தனந்த
தானை தானை தானன் தந்த
தந்ததன தான தனதானா.

ஒருமடமாது மொருவனுமாகி
யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுலகங்க வொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து

பனியிலொர்பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்து புகுந்துதிரண்டு
பதுமவரும்பு கமடமிதென்று
பார்வை மெய்வாய் செவிகால் கைகளென்ற

உருவமுமாகி யுயிர்வளர்மாத
மொன்பதுமொன்று நிறைந்துமடந்தை
யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும் வாரமுநாளுமறிந்து

மகளிர்கள்சேனை தரவணையாடை
மண்படவுந்தியு தைந்து கவிழ்ந்து
மடமயில்கொங்கை யமுதருமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து

ஒளிநகையூற லிதழ்மடவாரு
வந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியிலிருந்து மழலை மொழிந்து
வாவிருபோவென நாமம் விளம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமணியாடை யரைவடமாட
வுண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடி நடந்து
அஞ்சுவயதாசி விளையாடியே.

உயர்தருஞான குருவுபதே
முத்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து

மயிர்முடிகோதி மறுபதநீல
வண்டிமிர் தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க

மதனசொரூப னிவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு

மன துபொறாம லவர்பிறகோடி
மங்கலசெங்கல சந்திகழ் கொங்கை
மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி

ஒருமுதலாகி முதுபொருளாயி
ருந்ததனங்களும் வம்பிழிழந்து
மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து

வளமையுமாறி யிளமையுமாறி
வன்பல்விழுந்திரு கண்களிருண்ரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து
செங்கை யினிலோர் தடியுமாகியே.

வருவதுபோல தொருமுதுகூனு
மந்தியெனும்படி குந்திநடந்து
மதியுமழிந்து செவிதிமிர்மந்து
வாயறியாமல் விடாமன் மொழிந்து

துயில்வருநேர மிருமல்பொறாது
தொண்டையு நெஞ்சமு முலர்ந்துவறண்டு
துதிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையச் பாலர்கள் கோரணிகொண்டு

கலியுகமீதி விவர்மரியாதை
கண்டிடுமென்பவர் சஞ்சலமிஞ்ச
கலகலவென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து

தெளிவு மிராம லுரைதடுமாறி
சிந்தையு நெஞ்சமு முலைந்துமருண்டு
திடமுமுலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதென நொந்து

மறையவன்வேத னெழுதியவாறு
வந்ததுகண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினியெனதொந்த
மேதினி வாழ்வுநி லாதினிநின்ற

கடன்முறை பேசு மெனவுரை நாவு
றங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிடவந்து
பூதமு நாலுசு வாசமு நின்று
நெஞ்சு தடுமாறி வருநேரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர் பிறைபோல வெயிறுமுரோம
முஞ்சடையுஞ் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல் யமதூதர்கள் வந்து

வலைகொடு வீசி யுயிர்கொடுபோக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் காலமறிந்து

பழையவர் காணு மெனுமயலார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர்பந்த
ரிடுமெனவந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியுமென்று

பலரையுமேவி முதியவர் தாமி
ருந்தசவங்கழு வுஞ்சிலரென்று
பணிதுகில் தொங்கல் களபமணிந்து
பாவகமே செய்து நாறுமுடம்பை

வரிசை கெடாம லெடுமனவோடி
வந்திளமைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலையடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து

விறகிடமூடி யழல்கொடு போட
வெந்து விழுந்துமு றிந்து நிணங்க
ளுருகி யெலும்பு கருகி யடங்கி
யோர்பிடி நீறு மிலாத வுடம்பை
நம்புமடி யேனை யினியாளுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

1. ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

2. முந்தித் தவம்கிடந்து முந்நூறுநாள் சுமந்தே
அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்து - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

3. வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்!

4. நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்!

5. அரிசியோ நான் இடுவேன்? ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்துமகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு.

6. அள்ளி இடுவது அரிசியோ! தாய் தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனே கூசாமல்? - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென் இலங்கையில்
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூழ்க மூழ்கவே!

8. வேகுதே தீயதனில்; வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ! - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டில் என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை!

9. வெந்தாளோ சோணாகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்துஎன்
தன்னையே ஈன்றெடுத்த தாய்!

10. வீற்றிருந்தாள் அன்னை, வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள் - பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!

**வாழ்த்து**

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அக்காவுக்கு ...

தம்பி என்று அழைத்த குரல்
காதோரம் கேட்கிறது - ஆனால்
உன்னைக் காண முடியவில்லை
உரிமையுடன் உறவு சொல்லி
அழைத்திடுவாய்
உறவு கொண்டு - உணர்த்திடுவாய்
அறிவுரைகள் பற்பலவும்
உற்றநோய் பாராது
உன்பணி செய்தாய் - பெற்றவனை
இழந்தபோதும் தலைமகளாய் - நீ
இருந்து தியாகங்கள் பல செய்தாய்
தாராய் நீயே ஆறுதலை
அக்கா என்றழைத்த என்தனுக்கு ....

தம்பி - செ.சந்திரசேகரம்

## மணியோசையில் வந்த குரல் எங்கே ...?

தொலைதூரம் இருந்தாலும்
தொலைபேசி அடித்ததுமே
ஓடிச் செல்வேன் - அக்கா
உன் குரல் கேட்க - நீ
செல்ல மணியா? - என்று
செல்லமாய் கேட்டிடுவாய்
ஆயிரம் செய்திகளை
உறவுகளின் இருப்புக்களை
ஊரார் செய்திகளை
உரைத்திடுவாய் அரைநொடியில்
உன் பிரிவால் - ஊரார்
எனை உலுப்புகிறார்
உண்மையில் நீ
எங்கே சென்றாய் - எனக்கு
தொலைபேசி வெறுக்கிறது - நீ
தொலைதூரம் சென்று விட்டாய்.

செல்வபூரணி (செல்லமணி)
தங்கை - கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீர்த்தனை

இராகம் : புன்னகவராளி　　　　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

நாகபூஷணி அம்மா நாகபூஷணி உனை
நம்பும் அடியார்க்கருள் நாகபூஷணி　　　　　　　　　　　(நாக)

## சரணங்கள்

சோகம் எல்லாந் தவிர்ப்பாய் நாகபூஷணி - உன்பேர்
சொல்ல இனிக்குதடி நாகபூஷணி
பாகம் அமர்ந்திறைவ ரோடுவருவாய் - அருள
பாலித்து எங்குறைகள் தீர்க்க வருவாய்　　　　　　　　　　　(நாக)

நாகங்கள் பூசை செய்யும் நாகபூஷணி - அருட்
தாகம் தணித்திடுவாய் நாகபூஷணி
போகம் தருபவளே நாகபூஷணி - எங்கள்
புண்ணியப் பூங்கொடியே நாகபூஷணி　　　　　　　　　　　(நாக)

நீடுங்கொடித் தேரின் மிசை ஏறிவருவாய் - அன்பர்
நின்னை சரணடைய ஓடி வருவார்
பாடும் வராளி இசை கேட்டு வருவாய் - எம்முன்
பாடிப் பாடி ஓடிவிளையாடி வருவாய்　　　　　　　　　　　(நாக)

விளையாடு மாமயிலே விளையாடு மாமயிலே - எம்
வினையோட வாமயிலே - எம்
அவைமீது வாழ்மயிலே - எங்கள்
அணையாக வாமயிலே


வா வா வா வா வா - அருள் தா தா தா தா தா
வா வா வா வா வா - தா தா தா தா தா　　　　　　　　　　　(நாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org